**செய்தி வெளியீடு எண். 33/2021** **நாள்: 09.12.2021**

**<u>சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் குறைதீர்க்கும் கூட்டம்</u>**
**<u>குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களில் சனிக்கிழமையன்று (11.12.2021) நடைபெறும்</u>**
**<u>சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்</u>**

...

சென்னைக் குடிநீர் வாரிய குறைதீர்க்கும் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை **(<u>11.12.2021</u>)** அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், திறந்தவெளிக் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட உள்ளது. தற்போது, சில நிபந்தனைகளுடன் கூடிய தளர்வுகளை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதின் பேரில், பாதுகாப்பு விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து அனைத்து பகுதி அலுவலகங்களிலும் இரண்டாம் சனிக்கிழமைகளில் திறந்தவெளி கூட்டங்கள் நடைபெற உள்ளது.

இம்மாதத்திற்கான திறந்தவெளிக் கூட்டம் எதிர்வரும் **சனிக்கிழமை (<u>11.12.2021</u>)** அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த திறந்தவெளிக் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

| | | |
|---|---|---|
| பகுதி அலுவலகம் 1 | – | திருவொற்றியூர் |
| பகுதி அலுவலகம் 2 | – | மணலி |
| பகுதி அலுவலகம் 3 | – | மாதவரம் |
| பகுதி அலுவலகம் 4 | – | தண்டையார்பேட்டை |
| பகுதி அலுவலகம் 5 | – | ராயபுரம் |
| பகுதி அலுவலகம் 6 | – | திரு.வி.க.நகர் |
| பகுதி அலுவலகம் 7 | – | அம்பத்தூர் |
| பகுதி அலுவலகம் 8 | – | அண்ணா நகர் |
| பகுதி அலுவலகம் 9 | – | தேனாம்பேட்டை |
| பகுதி அலுவலகம் 10 | – | கோடம்பாக்கம் |
| பகுதி அலுவலகம் 11 | – | வளசரவாக்கம் |
| பகுதி அலுவலகம் 12 | – | ஆலந்தூர் |
| பகுதி அலுவலகம் 13 | – | அடையாறு |
| பகுதி அலுவலகம் 14 | – | பெருங்குடி |
| பகுதி அலுவலகம் 15 | – | சோழிங்கநல்லூர் |

இந்த திறந்த வெளிக்கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே இந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

இணைஇயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்